# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2018 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,
## தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்தச்) சட்டம்

---

*(2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, யூன் மாதம் 22 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2018 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்தச்) சட்டம்**

[2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது]

ச.வ.–ஓ 34/2017

**1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தைந்தாமாண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் (இது இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்:-

(i) குடியரசின் சனாதிபதியின் செயலாளர்;

(ii) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சு செயலாளர்; அத்துடன்";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை (ஆ) என்னும் பந்தியாக மீள இலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(3) மூன்றாம், (4) ஆம் உட்பிரிவுகளில் "உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவானது, “சனாதிபதியே” என்னும் சொல்லுக்குப் பதிலாக “குடியரசின் சனாதிபதியின் செயலாளரே” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு “நிதி” என்னும் சொல்லுக்குப் பதிலாக “பாதுகாப்பு” என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*